# பத்திரிக்கை செய்தி

## கட்டிட வரைபட அனுமதி வழங்க ரூ.1,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய ஊராட்சிமன்ற செயலாளர் கைது

புகார்தாரர் திரு.தங்கராஜ், இலுப்பகுடி, சிவகங்கை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய இடத்தில் புதிதாக வீடு கட்ட உத்தேசித்து கட்டிடத்திற்கான வரைபட அனுமதி கோரி பூசலகுடி பஞ்சாயத்து அலுவலகம், கண்ணன்குடி யூனியன், சிவகங்கை மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.மணிமுத்து, ஊராட்சிமன்ற செயலாளர், பூசலகுடி பஞ்சாயத்து, கண்ணன்குடி யூனியன், சிவகங்கை மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிவகங்கை பிரிவு அலுவலகத்தை அணுகி மேற்படி திரு.மணிமுத்து, ஊராட்சிமன்ற செயலாளர் மீது புகார்மனு கொடுத்துள்ளார். இப் புகாரின் பேரில் இன்று 20.04.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.மணிமுத்து, லஞ்ச பணம் ரூ.1,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# **PRESS NOTE**

## **PANCHAYAT SECRETARY ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.1,000/- FOR ISSUING BUILDING PLAN APPROVAL**

The complainant Tr.Thangaraj, is residing at Iluppakudi Village, Sivagangai District. The complainant had applied building plan approval for new constructing house at Poosalakudi Panchayat, Kannankudi Union, Sivagangai District. Tr.Manimuthu, Panchayat Secretary demanded Rs.1,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Sivagangai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 20.04.2023, during the trap proceedings, Tr.Manimuthu, Panchayat Secretary, reiterated his earlier demand and received the bribe amount of Rs.1,000/- from the complainant. The accused was arrested.